# கிரேக்கர்களின்

# கைவண்ணம்









ஆக்கம்: திரு.து.துசியந்தன் B.A.(Cey)
Sp.Tr.(Art)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேக்கர்களின்

# கைவண்ணம்

ஆக்கம் : திரு து.துசியந்தன் B . A (Cey)
Sp. Tr . (Art)

வெளியீடு :

**Institute of Art Training**
ஆத்திசூடி வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் : கிரேக்கர்களின் கைவண்ணம்

ஆசிரியர் : திரு. து.துசியந்தன் B . A. (Cey)
Sp. Tr . (Art)

முதற்பதிப்பு : 2004

வெளியீடு : Institute of Art Training
ஆத்திசூடி வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

கணனி வடிவமைப்பு : I.A.T கணனிப் பிரிவு

அச்சுப்பதிப்பு : புருஷோத் பிறின்டேஸ்
உரும்பிராய்

விலை : 50 .00

Title : Krakkarkalin Kaivannam

Author : T.Thusheyanthan. B . A. (Cey)
Sp. Tr . (Art)

First Edition : 2004

Published by : Institute of Art Training
Arththisoody Lane
Kantharmadam
Jaffna

Designed : I.A.T Computer Unite

Printed : Purushoth Printers
Urumpirai

Price : 50.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

கலையின் பால் நாட்டமில்லாத மனித ரொருவரை காண்பது அரிது அதை போல கலை வெளிப்பாடற்ற நாகரிகத்தை காண்பதும் அரிது. இந்த வரிசையில் இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே அரும்பெரும் கலைப் பொக்கிசங்களை நேர்த்திய அமைத்தவர்கள் கிரேக்கர்கள் இந்த கிரேக்கர்களின் சிறந்த கலை வெளிப்பாடுகள் பிற்கால ஐரோப்பிய கலை வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைந்தது. இவ் வகையில் சிறப்பு மிக்க இந்த கிரேக்கர்களின் கலை வெளிப்பாட்டை கிரேக்கர்களின் கைவண்ணம் என்ற நூலில் தருவதை யிட்டு மகிழ்வடைகிறேன்.

ஐரோப்பியர்களின் கலைகளை எம் மாணவர்கள் கற்பதற்கு சிறந்த நூல்கள் கிடைக்காமையும் ,அவை பெரும்பாலும் பிற மொழிகளில் இருப்பதும் பெரும் பிரச்சனையாக உள்ளது. இதை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக இத் நூலை வெளியிட எண்ணினேன்.

இந் நூலானது க.பொ.த உயர்தர வகுப்பில் சித்திர பாடத்தை கற்பவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உதவியாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

நன்றி

ஆத்திசூடி வீதி
கந்தர்மடம்

து.தசியந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி

கிரேக்கர்களின் கைவண்ணம் எனும் நூலில் கிரேக்கர்களின் கலை வெளிப்பாட்டை நூலாசிரியர் திரு. துரைவீரசிங்கம் துசியந்தன் தந்துள்ளார்.

ஐரோப்பியர்களின் கலைவளர்ச்சி பற்றி போதிய நூல்கள் தமிழில் வெளிவரவில்லை. பிறமொழி அறிவு குன்றி நிற்கும் மாணவருக்கு இத்தகைய நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

உயர்தரப் பரீட்சைக்கு சித்திர பாடம் கற்கும் மாணவர் எண்ணிக்கை குறைவு. உயர்தரத்தில் சித்திரபாடத்தை கற்கும் மாணவருக்கு ஒரு உசாத்துணை நூல் இந்த கிரேக்கர்களின் கைவண்ணம்.

வளர்ந்து வரும் இளம் ஆசிரியரை ஊக்குவிப்பது எம் கடன் அந்தவகையில் நூலாசிரியர் மேலும் பல நூல்களை எழுதி வெளியிட இறையருள் துணை நிற்பதாக.

அ.சிறிக்குமாரன்.
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை

### அறிவியல் சித்திரங்களின் ஆற்றல் தொடரட்டும்

கலைஞன் சூரியனின் கதிர்களை சுதந்திரமாக தொட்டுப் பார்க்கும் சுதந்திர மனிதன். ஓவியனின் சுதந்திர இரத்தம் தூரிகையில் வர்ணமாக தீட்டும் காலம், ஓவிய உலகில் கிரீடமாகின்றது. நாகரிகத் தேவதை கிரேக்கத்தின் மனிதர்களுக்குள், மகுடங்களுக்குள், சமயத்திற்குள், மனிதத்தைப் பாச்சியதால் கிரேக்கர்களின் கைவண்ணம் உலகப்பந்தில் முத்துப் பந்தல்கள் கட்டியுள்ளது.

நமது மண்ணில், நமது மாணவர்கள் நந்தவன நதிகளாக வாழ்வை சுமப்பதற்காக திரு.து.துசியந்தன் கிரேக்கர்களின் கைவண்ணம் என்ற பூந்தொட்டிலைச் சமர்ப்பணம் செய்திடும் வித்துவம் வாழ்த்தப்படுகிறது.

இயற்கை நவிற்சியில் கிரேக்க சிற்பத்தின் உச்சம் கிரேக்கர்களின் கைவண்ணம் என்ற நூலில் உயர்வை உயர்வாக்கி உந்துகிறது.

பொற்காலத்தின் நயமும் மென்மையும் கிரேக்கர்களின் கைவண்ணத்தில் சுதந்திரத்தின் முழுமையையும் வெளிச்சம் காட்டியது போல் தத்துவங்களும் உலகப் பின்னலில் ஓவியங்களை வரைந்து பரப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நிலையிலும், எந்த வாழ்விலும், எந்த வரலாற்றிலும் கலைஞன் சுதந்திரத்தை இழக்கும் நேரம் வரலாறும், வாழ்வும் தோல்விக்குள் வீழ்த்தப்படுகிறது.

நதிக்கரையில் நாகரீகத்தின் பழமை, முதிர்வு, அறிவு, அறிவியல் எம் மக்களின் தொல்லியல் மூளைகளுக்குள்ளும் தோற்றங்களை அளித்ததை நினைவு கூரல் வேண்டும்.

கற்பனைகளின் நிதர்சன வடிவம் கி.மு.கிரேக்கத்தின் சுதந்திரக் கலைஞர்களால் அறிவியல் உருக்களைப் பிரகடனம் செய்தது. அந்த வகையில் கலைத்தேடல்களில் ஈடுபடும் நம் மாணவ சமூகம் புதிய ஆக்கங்களை வெளிப்படுத்தல் வேண்டும்.

கிரேக்கர்களின் கைவண்ணம் என்ற நூலை எழுதிய துசியந்தன் மேலும் பல நூல்களை மாணவர்களுக்காக எழுதி வழங்க என வாழ்துக்களை வெளியிடுகின்றேன்.

*ப. விக்னேஸ்வரன்,*
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.
02.08.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகம்**
**கிரேக்க வரலாறு**

ஐரோப்பிய நாகரிக வளர்ச்சிக்கு கிரேக்கம் தொட்டிலாக அமைந்தது. ஆசியா ஐரோப்பா, ஆபிரிக்கா எனும் மூன்று கண்டங்களுக்கு நடுவே மத்திய தரைக்கடல் இருக்கிறது. அதன் வட கீழ்ப் பகுதியில் உள்ள கிரேக்க நாட்டில் கிரீட்டு வாசிகள் குடியேறி நகரங்களை அமைத்தும் அழகிய கை வண்ணப் பொருட்களை அழகாக ஆக்கியும் வாழ்ந்தனர். அங்கு கி.மு 1500க்கு முன் வடக்கே இருந்து புலம் பெயர்ந்து வந்த மக்கள் குடியேரினர். இவர்கள் முன்னர் வாழ்ந்தவர்களுடன் கலந்து அவர்களது நாகரீகத்தைத் தாமும் ஏற்றுக் கொண்டனர்.


கிரேக்கர் மதில் கட்டிய பட்டணங்களை நன்கு அமைத்து நாகரிக வாழ்வைப் பெருக்கினர். அதென்ஸ், ஸ்பாட்டா. கொரிந்த், தீப்ஸ் முதலிய நகரங்கள் வளர்ச்சயுற்றன. இத்தாலி, பிரான்ஸ் முதலிய நாடுகளின் தென்கரையிலும் கருங்கடற்கரையிலும் கிரேக்கர் குடியேறினர். அவர்கள் நாடு மலைகளாலும் கடலாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கப்பட்டிருந்தது. அவர்கள் பெருகிவரும் சனத்தொகைக்குப் ஏற்ப போதிய வருவாயை நிலத்தில் பெற இயலவில்லை. எனவே கடல் கடந்து சென்று வாணிபம் செய்தும் குடியேற்றங்களை அமைத்தும் செல்வம் பெற்றனர். நகரங்களுக்குள் போட்டி ஏற்பட்டது. போர்களும் நிகழ்ந்தன. ஆயினும் கிரேக்கர் தமது வீரகாவியங்களைப் படித்தும் ஒரு வகையில் ஒன்றுபட்ட வாழ்க்கையுடையவர்கள் என்ற உணர்ச்சி பெற்றனர். நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பியா என்ற இடத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் அப்போது கிரேக்க பட்டண அரசுகள் தம்முள் போர் புரியாது ஒன்று படும்.

கி.மு 7ம், 6ம் நூற்றாண்டுகளில் கிரேக்க நகரங்கள்




ஆக்கிரோ போலி என்ற கிரேக்க நகரம்

நாகரீக உணர்வு பெற்றன. அரசர்களின் அதிகாரம் குன்றியது. உயர் குலத்தோர் நகர பரிபாலனத்தைச் செவ்வனே நடாத்தினர். இதன் தொடர்ச்சியாக குடியாட்சி ஏற்படலாயிற்று. கோயில்கள் கட்டப்பட்டன. குருமார் மட்டுமின்றி பிறருக்கும் கல்வியில் உயர்ந்தனர். சோக்கிரதீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டல் போன்ற தத்துவ அறிஞரும், விஞ்ஞானிகளும் தோன்றினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேக்க கட்டடக் கலை












கிரேக்க தூண் அமைப்பு

1. டொறிக்
2. அயோனிக்
3. கொறிந்தியன்







← டொறிக் கட்டிட முகப்பு



↑ பார்த்தினன் ஆலயம்



← கிரேக்க நாடக அரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரேக்க சிற்பக்கலை



வீனஸ்




ஹேர்மிஸ்



அப்றோடைற் நிடோஸ்




பரிதிவட்டம் வீசுபவன்



ஈட்டி எறிபவன் (சமநிலை வீரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





லவ்வகூன் தொகுதிச்சிற்பம்

← இருக்கின்ற குத்துச்சண்டை வீரன்

## கிரேக்க வேடமுகங்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கிரேக்க மட்பாண்டங்களும் ஓவியங்களும்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினீஷியர் என்ற சாதியரிடமிருந்து எழுத்தை அறிந்த கிரேக்கர் நெடுங்கணக்கை (எழுத்துத் தொகுதியை)த் திருத்தி அமைத்தனர். நூல்கள் எழுதப்பட்டன. கிரேக்க மொழி வளம் பெற்றுப் பிறமொழிகளின் வளர்ச்சிக்குத் தாய்போல் உதவியது. புலவர்கள் ஒடிசி ,இலியட் போன்ற அரிய மகா காவியங்களை எழுதினர். நாடக ஆசிரியர்கள் நாடகங்களை ஆக்கினர். ஆண்டுதோறும் அரசாங்கம் அதென்ஸ் நகரில் நாடகப்போட்டி நடைபெறும் சிறந்த நாடகத்துக்கு அரசாங்கம் பரிசு வழங்கும். இது மட்டுமன்றி சிற்ப, சித்திர, கட்டிடக்கலைகளில் கிரேக்கர் அடைந்த முன்னேற்றம் மிகப்பெரியது. இவர்களின் இக் கலைப்பாணியே பிற்கால ஐரோப்பிய சிற்ப சித்திர, கட்டிடக்கலை வளர்ச்சிக்கு அடிநாதமாக அமைந்தது.

**கிரேக்கத்தின் புராதன நகரங்கள் சில**




**மத்தியதரைக்கடல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிரேக்கர்களின் கைவண்ணம்**

கிரேக்கத்தின் இயற்கையமைப்பும் மலைகள், மத்தியதரைக் காலநிலை, அவர்களிடம் வளர்ந்த பகுத்தறிவு சிந்தனை, வாழ்கை பற்றிய ஆழமான சிந்தனை, உயர் இனநாயகம் என்பன கலையின் வளர்ச்சியில் பெரும் பங்கை வகித்தன

கி.மு750 இல் இருந்து 300 வருடங்கள் வரை நிலை பெற்ற கிரேக்க கலை எகிப்திய கலையின் வளர்ச்சியாகும் கிமு 550 அளவில் விசேட முன்னேற்றகாலத்தையடைந்த கிரேக்ககலை எகிப்திய கலைப்பாணி யின் தாக்கத்தில் இருந்து முற்றாக விடுபட்டு சுதந்திரமாக வளர்ச்சி யடைந்தது.

இவ்வாறு வளர்ச்சியடைந் தமைக்கு பின்வரும் காரணங்கள் ஏதுவாக அமைந்தது.

- கிரேக்க கலைஞர்களுக்கு கிடைத்த பூரண சுதந்திரம்
- எகிப்தைப் போன்று கலைஞர் களுக்கு கட்டளையிட அரசர்க ளோ மதத் தலைவர்களோ இருக்காமை
- கிரேக்க கலாசாரத்தால் கிடைத்த உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் கலைஞர்களின் எண்ணப்படி அளவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும், தமது எண்ணப்படி செயலாற்றவும் உகந்த சூழல் கிடைத்தது.

## கிரேக்க நாகரிக வளர்ச்சிக்கு
## கிரீட், மைசீனில் நாகிகத்தின் பின்புலம்

கிரேக்க கலைவரலாறு ஒரு தொடர்ச்சியின் தனித்துவமான அலகு என்று குறிப்பிடப்படும் ஐரோப்பிய நாகரிக வளர்ச்சிக்கு கிரேக்கம் தொட்டிலாக அமைந்தமை போன்று கிரீற் நாகரிகம், இதற்கு சற்றே பிந்தியதும் கிரேக்கத்தின் உட்பகுதியிலே காணப்பட்டதுமான மைசீனிய நாகரிகமும் பின்புலமாக அமைந்தது. கி.மு 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.மு 12ம் நூற்றாண்டு வரை விளங்கிய மைசீனிய (Mycenae), கிரீட் நாகரிகங்கள் கலைப் படைப்புகள் பலவற்றை விட்டுச்சென்றுள்ளது.

## கிரீட்டு நாகரிகம் / ஈசிய நாகரிகம்

மத்திய தரைக்கடலில் கிரீசுக்குத் தெற்கில் உள்ள கிரீட்டு தீவு ஏறத்தாழ 192 கி.மீ நீளமும் 48 கி.மீ அகலமும் உள்ளது உலகின் மிகப்பழமையான நாகரீக மையங்களுள் இத்தீவும் ஒன்றாகும் இதுவே ஈசிய நாகரித்தின் பிறப்பிடமாகும் கிரீட்டுத் தீவில் நூற்றுக்கு மேற்பட்ட நகரங்கள் சிறந்துவிளங்கின அவற்றுள் தலைசிறந்த நகரங்கள் நாசசு (Cnossus), பீசுடசு (Phaestus) என்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கிரீட்டு நாகரிகம் அல்லது மினோவ நாகரிகம் (Minoun Civilization) என்பர். ஏனெனில், நாசுக நகரை மினோசு (minos) என்றும் அரசர் ஆண்டு வந்தார்.

மினோவ நாகரிக மக்கள் கி.மு 2000 இல் தம் வாழ்வில் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்தனர் இவர்கள் பெரிய அரண்மனைகளையும் கட்டிடங்களையும் கொண்ட நல்ல நகரங்களை அமைத்துக்கொண்டு மாட மாளிகைகளில் சிறந்த செல்வப்பெருக்குடன் வாழ்ந்தனர். இவர்களின் அரண்மனைச் சுவர்கள் சுதையோவியங் களால் (fresco) அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவ்வோவி யங்களில் ஊர்வலங்களையும், ஆண்,பெண்கள் பகட்டாய் இருப்பதையும், போர்காட்சியையும் காணமுடியும். எனினும் இந்த ஓவியங்களில் எகிப்திய ஓவியப்பண்புகள் பிரதிபலிப்பதை நோக்கமுடியும்.

கிரீட் தீவில் கனோஸஸ் (Knassos) என்ற இடம் மினோவன் கலை வளர்ச்சியின் மையமாக விளங்கியது. இங்கு மக்கள் வாழ்க்கையுடனும் தொழில் முறைகளுடனும், சடங்குகளுடனும் இணைந்த பல கலைப்பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன, இரு பக்கங்களில் காதுத்துளைகள் கொண்ட மண்சட்டி, கோலவுருவங்கள் வரையப்பெற்ற மட்பாண்டங்கள், கைப்பிடியுடன் நீண்ட குவளைகள் (கோப்பைகள்), கூசாக்கள், வெண் சலவைக்கல் வடிவங்கள் போன்றன இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். அவைகளுள் பொற்கோப்பை ஒன்று புகழ்பெற்றது இதில் இடை சிறுத்த மனிதர்கள் எருதுகோளைப் பிடிக்கும் காட்சி இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவிற்சி ததும்ப புடைப்புச்சிற்பமாக அமைக்கப் பெற்றுள்ளது.

## மைசீனிய நாகரிகம்

மத்திய தரைக் கடற்கரை முழுவதும் பரவிய கிரீட்டு நாகரிகத்தின் செல்வாக்கால் கிரேக்க நாட்டில் ஈசியக் கடற்கரைகளில் மிகப் பழமையான சிதைந்த நகரமான மைசீனியாவில் நாகரிகம் ஒன்று தோன்றியது. இதுவே மைசீனிய நாகரிகமாகும். மைசீனியாவின் சிங்கவாயில் பபிலோனியர் கலையின் செல்வாக்கை புலப்படுத்துகிறது

நிலத்தடியிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட சின்னங்கள், இறந்தவர்கள் வீடுகளில் புதைத்து வைக்கப்பட்ட நாள் தோறும் பயன்படும் எளிய பொருட்கள், செல்வப்பெருக்கைக் காட்டும் பொருட்கள் போன்றவை இந்த நாகரிகத்தின் அடிப்படைச்சான்றாகும்

மைசீனியாவின் பொருட் செல்வத்தை மட்பாண்டத்தொழில் பெருக்கியது இந்த மட்பாண்ட வேலைகளில் பூச்சாடி வேலைப்பாடுகள் முதன்மையான இடத்தைப் பெற்றது. கோப்பைகள் உலோகத்தட்டுகள் வாள்கள் முதலியவற்றில் வேலைப்பாடுகள் செய்யும் கலையும் வளர்ச்சி பெற்றிருந்தது.

தங்கத்தாலும் வெள்ளியாலும் அணிகள் செய்யும் கலை மைசீனியர்கள் பண்பாட்டிலே சிறப்புப் பெற்றிருந்தது வெள்ளித்தட்டுகளில் கொம்புகளையுடைய பசுவின் உருவம், காட்டுப்பூனைகள் வாத்துக்களை துரத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி, சிறுத்தைகள் மீது சிங்கங்கள் பாயும் காட்சி முதலியனவும் செதுக்கப்பட்டுள்ளது

கீறிட், மைசீனிய நாகரிகங்களின் இந்த சிறப்பான கலை வெளிப்பாடுகள் பிற்கால கிரேக்க நாரீக கலைவெளிப்பாடுகளில் செல்வாக்கு செலுத்தியுள்ளதை காணலாம்.

## கிரேக்க கட்டிடக்கலை

கி.மு 5களில் கல்லை ஊடகமாக கொண்டு கட்டிடங்களை கட்டும் மரபை கிரேக்கர்கள் ஆரம்பித்து விட்டார்கள் இதற்கு முந்திய மரக்கட்டிட அமைப்பு பற்றிக் கூற சான்றுகள் குறைவாக இருப்பதனால் கற்கட்டிட மரபில் இருந்தே கட்டிடக்கலை பற்றி கூறவேண்டியுள்ளது.


கிரேக்க கட்டிடங்களில் பின்வரும் நுட்பங்கள் முக்கியமானதாக காணப்படுகிறது.

- கிரக்க கட்டிடம் எகிப்திய கட்டிடமளவிற்கு விசாலமானதாக இல்லாதுவிடினும் விசேட இயல்புடையது.
- பெரும்பாலும் கலை நுணுக்கமுடையது
- மேடைமீது கட்டிடங்களை கட்டுதல்
- படிவரிசை முக்கிய கூறாக இருத்தல்
- முக்கோண வடிவமான கூரையமைப்பு
- தூண்வரிசை
- தக்க விகிதாசாரங்களை பயன்படுத்தல்
- ஒளியமைப்பில் கவனமெடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ மென்மையான கலையலங்காரத்தினால் அலங்கரிக்கப்படல்





கிரேக்கர்கள் கட்டிடங்களில் புதிய ஆக்கங்களை ஏற்படுத்த முனைந்தார்கள் அவற்றுள் மூன்று முறைமைகள் சிறப்பு பெற்றிருந்தன அவையாவன

- ❖ டொறிக்
- ❖ அயோனிக்
- ❖ கொறிந்தியன்

கட்டிடத் தூண்களின் வடிவமைப்பைக் கொண்டு மேற்கூறப்பட்ட மூன்று முறைகளையும் விளங்கலாம். டொறிக் கட்டிடத்தின் தூண்களின் தலைப்பகுதி சாதாரணமானதாகவும் எளிமையானதாகவும் காணப்பட்டது. அயோனிக் கட்டிடத் தூண்கள் ஒல்லியானதாக காணப்பட்டது அவற்றின் தலைப்பகுதியின் இரு பக்கமும் செம்மறியாட்டின் கொம்புகளைப் போன்று சுருள் வடிவ அமைப்பு நன்கு செப்பனிடப்பட்டு செதுக்கிடப்பட்டுள்ளது. கொறிந்தியன் கட்டிடத்தூணின் தலைப்பகுதி மணிவடிவ மானதாகவும் அகந்தாஸ் (Acanthus) இலைகளைப் போன்ற உருவங்கள் அவற்றிலே அலங்காரமாக பொறிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்களின் கூரைகள் கற்களினாலேயே போடப்பட்டன தரையும் பாறை நிறைந்ததாக காணப்பட்டதால் அத்திவாரம் போடும் முறை இருக்கவில்லை. கட்டிடங்களின் முற்பகுதியாக சிற்பங்கள் உள்வாங்கப்பட்டது.

கிரேக்க கட்டிடக்கலையின் சிறப்புக்களை அவர்களது கோயில்களிலும் பாரிய அரங்க நிர்மாணத்திலும் காணலாம். கோயிலின் கருவறை நாற் சதுர வடிவில் அமைப்பில் காணப்படுகிறது. கருவறைக்கு செல்லும் தாழ்வாரத்தில் பல தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது. அத்தூண்கள் மீது உத்தரங்களும் கூரைகளும் அமைக்கப்பட்டன. வெளியே நீண்டிருக்கும் கூரைகளைத் தாங்குவதற்கு வெண்பளிங்குக் கற்களால் அழகிய தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**பார்த்தினன்**

கிரேக்க கட்டிடக்கலை வரலாற்றில் பார்த்தினன் தேவாலயம் முக்கியமானது பின் வந்த தேவாலயப் பாணிகளுக்கெல்லாம் முன்னோடியாக அமைந்தது. இதனுடைய தொடர்ச்சியாக பசிலிக்கா உருவாகிறது. பார்த்தினன் தேவாலயத்தில் சீரான ஒழுங்கமைப்பு என்பது முக்கியமானதாக காணப்படுகிறது. கட்டிடத்தின் உட்பகுதியில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவிற்கு டொறிக் பாணியிலான தூண்கள் காணப்படுகிறது. இவ்வாலயம் அதினா எனும் பெண் தெய்வத்திற்கு அர்பணிக்கப்பட்டது. இங்குஅதினா தேவியின் சிலைகள் இரண்டு உள்ளது ஒன்று யானைத்தந்தத்தாலும் தங்கத்தாலும் மற்றயது பளிங்கு கல்லாலும் ஆக்கப்பட்டது. இப் புகழ் பெற்ற ஆலயத்தை கட்டிய பெருமை கலைகுஸ் என்ற கட்டிடக்கலைஞனை ச்சாரும் இவ்வாலயமானது பளிங்கு கல்லினால் அமைக்கப்பட்டது. ஆலயத்திவள்ளே வர்ணப்பூச்சுக்கள் காணப்படுகின்றது. முகப்பில் காணப்படும் முக்கோண வடிவில் கிரேக்க புராண விளக்க சிற்பங்கள் காணப்படுகிறது. இவ்வாலயத்திற்கான பெருமளவான சிற்பங்களை செய்த பெருமை பீடியாஸ் **(Phidias)** என்ற சிற்பியை சாரும்.

**பொசிடன் தேவாலயம் (Temple of posiedon)**


இக்கட்டிடம் கிரேக்கர்களின் கட்டிடக்கலை நிபுணத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. கி.மு 460 அமைக்கப்பட்டது.

**கிரேக்க நாடக அரங்கு.**

கிரேக்க நாடக அரங்கின் அமைப்பை நோக்கும்போது அவ்வரங்கு ஒரு மலையடிவாரமாக இருக்கும் இவ்வடிவாரத்தின் தளத்திலே வட்டமானதொரு பகுதி இருக்கும் (Dancing Circle) இவைகளுக்கு நடுவில் தைமீர் (Thymele) எனப்படும் பீடமும், பின்புறம் நடிகர்கள் வேடம் புனைவதற்கான கீன் (Skene) எனப்படும் குடிலும் காணப்படும் கீழுக்கும் அவையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருக்கும் இடத்திற்கு இடையில் இசையணியினர் வருவதற்குரிய பரடாசு (Parados) எனப்படும் நுழைவாயில் காணப்படும் இந்த அரங்கில் 14000 பார்வையாளர் அமரக்கூடியதாக இருந்தது.

## கிரேக்க சிற்பக்கலை

கிரேக்கர்களுக்கு கட்டான உடலின் மீது இருந்த காதல் அவர்களின் கலை மூலம் வெளிப்பட்டது. இந்த அடிப்படை நோக்கு பிற்கால ஐரோப்பிய கலை வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கியது. எகிப்திய சிற்பமரபில் இருந்து விடுபட்ட பின்னர் கிரேக்க சிற்பக்கலை தனக்கே உரித்தான சிறப்பியல்புகளுடன் மிளிர்ந்தது.

மாபிள் அவர்களது விருப்பத்திற்குரிய ஊடகமாக இருந்தது. தரைத்தோற்ற ரீதியில் சலவைக்கல் நிறைந்த நாடாக கிரேக்கம் விளங்கியது இதற்கு வாய்ப்பாக அமைந்தது. இருந்த போதும் ஆரம்பகாலச் சிற்பங்கள் மாபிள் கல்லினால் ஆனவையல்ல களிமண், சுண்ணாம்புக்கல் ஆகியவையே ஆரம்பகால முக்கிய ஊடகமாக இருந்தது. பிற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலோக வார்புச் சிற்பங்கள் கிரேக்க காலத்தில் உயர்நிலையடைந்திருந்தது.

ஆரம்பகாலச் சிற்பங்கள் எகிப்திய தொடர்ச்சியை கொண்டிருந்தன முன்பின்னாக காலை வைத்திருத்தல், கைகளை பொத்தியவாறு வைத்திருத்தல் இறுகிய தன்மை என்பனவெல்லாம் எகிப்திய புரட்சியையே காட்டுகின்றன. ஆரம்பகால உலோகச் சிற்பங்கள் கைவினை நுட்பத்தில் பலவீனமாக காணப்படுகிறது கி.மு 6ம் நூற்றாண்டை சேர்ந்த அப்பலோவின் சிற்பம் இதற்கு சிறப்பான எடுத்துக்காட்டாகும்.

டிலாஸ் (Delas) எனும் தீவில் கண்டெடுக்கப்பட்ட ஆர்த்தமிடிஸ்(Attemis) எனும் பெண் தெய்வ சலவைக்கல் சிலை மிகப் பழைய கிரேக்க சிலைகளில் ஒன்றாகும் கி.மு 620 சேர்ந்த இச் சிலையின் தலை, கை போன்ற அமைப்புக்கள் வெறும் மரக்கட்டை போன்றுள்ளது. இச் சிலை போன்றதே சாமோஸ் தீவில் கண்டெடுக்கப்பட்ட ஹிரா (Hera)என்ற பெண்தேவதையின் சிலையாகும். இச்சிலைகள் யாவும் பழைய கிரேக்க சிலைகளுக்கு எடுத்துக்காட்டாகும்.

கிரேக்கர்கள் இயற்கை சக்திகளை மனித வடிவில் கடவுளாக வணங்கினர். கிரேக்க சிற்பிகள் இத் தெய்வ உருவங்களை வனப்பு மிக்க உடற்பயிற்சியாளர்களை மாதிரியாக கொண்டு செம்மையாக அமைத்தார்கள். இவர்கள் தேவாலய த்திற்காகவும், தெய்வங்களினதும், தேவகன்னிகளினதும் யாத்திரைக்கு கொண்டு செல்வதற்காகவும் , கோயில் களை அலங்கரிப்பதற்காக உன்னத சிலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தார்கள். தெய்வங்களினதும், தேவகன்னி களினதும் ஆக்கத்தில் அழகான ஆண்,பெண் போன்று காட்டப்படவேண்டுமென கிரேக்க மதகுருமார்கள் கலைஞர் களிடம் கேட்டுக்கொண்டனர். இதன் பெறுபேறாக மனித உடற் கூற்றியல் பற்றி கற்பதற்கு கலைஞர்கள் முனைந்தார்கள் அதன்படி நிர்வாண மனித உருவம் பற்றிய கருத்தக்களை முதலாவதாக வெளியிட்டவர்கள் கிரேக்க கலைஞர்களாவர். ஆண் அழகனும் . அழகு இராணி களும் தெரிவு செய்யும் போட்டிகளில் வெற்றி பெற்ற ஆண்,பெண் இருபாலாரையும் கலைஞர்கள் மாதிரி யாக(Models) கொண்டனர். கடவுளர் சிலைக்கு புறம்பாக நாட்டிற்கு சேவை செய்த அரசியல் வாதிகள், நூலாசிரியர்கள், விளையாட்டு வீரர்கள் ,தத்துவ ஞானிகள் போன்ற பல்வேறு மனிதர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களின் சிலைகளையும் அமைத்தார்கள்.

இதே நேரம் பிரபுத்துவ மரபைச்சார்ந்த பிரதிமைச் சிற்பங்களும் வளரத்தொடங்கின. மனித உடற் கூற்றியல் மீதான ஆழமான பார்வை. பௌதீக அழகு பற்றிய விருப்பம் ஆகியன எல்லாம் சேர்ந்து நிர்வாண சிற்ப மரபைத்தோற்றுவித்தது. இவற்றில் எல்லாம் தசைச்திரட்சிகள் அவற்றின் திடகாத்திரத்தோடும் அழகோடும் அமைக்கப்பட்டன. ஒரு அசைவு நிலையற்ற உருவ அமைப்பில் தசையின் அழகு அதிகம் புலப்படாது என அறிந்து கொண்ட அவர்கள் உருவங்களை பல்வேறு அசைவுகளில் உருவாக்கினார்கள் இதற்கு மிகச்சிறந்த உதாரணமாக மயிரனின் (Myran) பரிதிவட்டம் வீசுபவன் சிறப்பான உதாரணமாகும். அத்தோடு மனிதப் பருமனளவு அல்லது அதைவிட பலமடங்கு பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பங்களை ஆக்கினார்கள் இதுவும் அவர்களின் புலவுணர்வு நாட்டத்தின் வழியாக வருகிறது.

கட்டடத்தில் கூறுகளாக உள்ள சிற்பங்களும் மிக முக்கியமானவை அவற்றிலும் இரண்டு மரபுகள் உண்டு

1) புடைப்புச் சிற்பங்கள்
2) தனிநிலைச் சிற்பங்கள்

தூண்களின் நடுப்பகுதியில் சிற்பங்களை நிறுத்துவது என்ற பண்பு அவர்களிடம் இருந்தது. அதாவது கீழே ஒரு பீடம் நடுவில் சிற்பம் மேலும் மிகுதித்தூணும் போதிகையும் காணப்படும் இதற்கு உதாரணம் டெல்பீ என்ற இடத்தில் உள்ள அப்பலோவின் கோவிலை குறிப்பிடலாம். இவற்றின் கூரைக்கு கீழே இருக்கின்ற இடைச்சுவர் (Entablature) ஆகியன புடைச்சிற்பமுடைய தொகுதிகளை கொண்டதாக காணப்படும். இந்த புடைச்சிற்பமுடைய மேற்பகுதியை முன்னால் இருந்து பார்ப்பவர்களுக்கு தனிநிலை சிற்பம் தலையில் தாங்கி நிற்பது போல் இருக்கும் டொறிக் பாணியில் இந்த வேலைகள் அதிகம் நடைபெறும்.

கிரேக்கச் சிற்பக்கலை மூன்று வகையாக பிரிக்கப்படும். அவை

- தொடக்க காலம்(கி.மு 630 க்கும் கி.மு 400 க்கும் இடைப்பட்டது)
- பண்டைய கிரேக்கச் சிறப்புக் காலம் (Classical age),
- ஹெலனிஸ்ட் காலம் (Hallenistic period) எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக்கர்கள் கி.மு 600 ஆம் ஆண்டளவில் களிமண்ணை அழுத்தி அச்சு நுட்பத்தில் (Moulds) சிற்பங்களை வடித்தனர். இந்நுட்பத்தை இவர்கள் பியூனிசியர்களிடமிருந்து கற்றறிந்தனர். எகிப்தியர்களிடமிருந்து கி.மு 600 ஆம் நூற்றாண்டின் முடிவில் மிகப் பெருஞ்சிலைகள் செய்யும் கலையைக் கிரேக்கர்கள் அறிந்து கொண்டனர் கடின வெள்ளைக் கற்களைக் குடைந்து மிக்க அழகிய சிற்பங்களை இவர்கள் செய்தனர். ஆடையற்ற பல்வேறு இளைஞர்கள் நிற்கும் நிலைச்சிற்பங்கள் இக்காலத்தில் தத்ரூபமாக வடிக்கப்பட்டன. இவ்வகையான சிற்பங்களைக் கௌரை (Kourai) எனக் குறிப்பிட்டனர். இவ்வகைச் சிற்பங்களைச் கோயில்களிலும் கல்லறைகளிலும் பணியாளர்களாக நிற்க வைத்தனர். இதே போலவே ஆடையுள்ள பெண் சிற்பங்களையும் செதுக்கினர். இவை கோரை (Korai) எனப்பட்டன. இக் காலத்தில் அழகு வாய்ந்த உருவங்களும் கிரேக்கர்களால் வடிக்கப்பட்டன. தெல்பியில் (Deiphi) கிடைத்த கடவுளுக்கும் அரக்கருக்கும் நடந்த போர் நிகழ்ச்சியை சித்தரிக்கும் சிற்பம் மிக்க அழகு வாய்ந்தது.

இரண்டாம் கட்டக் (Classical age) கிரேக்கச் சிற்பங்களில் மனித வடிவம் மாறாவண்ணம் சிற்பங்கள் வடிக்கப்பட்டன. மனிதனின் ஒவ்வொரு பகுதியும் மிக நேர்த்தியான முறையில் கிரேக்கச் சிற்பிகளால் செதுக்கப்பட்டன. ஆடைகள் தடித்த மடிப்புகளை கொண்டவையாக காணப்படுகிறது இதற்கு தெல்பி நகரிலுள்ள தேர்ப்பாகன் சிற்பம் இவ் வகையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச்சார்ந்தது. பிற்காலத்தில் இவ்வாடைகள் காற்றில் பறப்பது போல் அமைக்கப்பட்டது .

கிரேக்கர்கள் சிற்பக்கலைகளில் மூன்றாவது காலகட்டம் ஹெலனிடிஸ் காலம் எனப்பட்டது. கிரேக்க சிற்பக்கலை வரலாற்றில் இக்காலம் பொற்காலம் என குறிப்பிடப்படுகிறது.

## ஹெலனிஸ்ட் காலம்
## Hellenistic Art 323 135 B.C)

ஹெலனிஸ்ட் காலத்தில் மகா அலக்சாந்தர் கிரேக்கப் பண்பாட்டை எகிப்துக்கும் கிழக்கு நாடுகளுக்கும் கொண்டு சென்றார். அலக்சாந்தர் கி.மு 323 இல் இறந்தபின் பேரரசு பல சிறு சிற்றரசுகளாக பிரிந்தது. இச்சிற்றரசுகள் கலை வளர்க்க ஊக்கமளித்தன. பல கலைப்பள்ளிகள் இக்காலத்தில் தொடக்கப்பட்டன அவற்றுள் உரோட்சு (Rhoads), பெர்காமம் (Pergamum) போன்ற பள்ளிகள் குறிப்பிடத்தக்கவை. இதன் விளைவாக சிற்பக்கலையில் ஒரு புதியபரிணாமம் ஏற்பட்டது. இந்த வளர்ச்சியே ஹெலனிஸ்ட் கலையாகும். இக்கால சிற்பங்கள் பாவங்களைக் காட்டும் அமைப்பில் வடிக்கப்பட்டன.

அற்புதமான சிற்பங்கள் இக்காலத்தில் படைக்கப்பட்டன உதாரணம் லெயகோன் குழு, அப்பலோசியஸ்சின் இருக்கின்ற குத்துச்சண்டை வீரர் (வெண்கலச் சிற்பம்) வயோதிபப் பெண் போன்ற சிற்பங்களில் இந்த உச்சங்களைக் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹெலனிஸ்ட்டிய காலத்தில் இயற்கை தவிர்ச்சி முறையில் கிரேக்க சிற்பம் உச்சநிலையடைந்தது. லெசிபஸ் (Lysipppus) என்பவரின் உடற்பயிற்சி வல்லுனர்களின் முழு அளவுச்சிற்பம் (வெண்கலம்) மிகவும் அழகு வாய்ந்ததாகும் இவர் செய்த மகா அலெக்ஸசாண்டரின் சிலையும் மிகவும் சிறப்பானது. இக்கால சிற்பியான ஸ்க்கோப்பஸ் (Scopus) என்பவர் செய்த சிலைகளில் உணர்ச்சி ததும்புகிறது. இவர் அமைதியான நிலைக்கு பதிலாக திடுக்கிடும் உணர்ச்சி ததும்புகின்ற நிலையில் படைத்தார்.

ஹெலனிஸ்டிய காலத்து பொற்காலக் கலையில் நயமும் மென்மையும் மறைத்து உணர்ச்சி தவிர்ச்சியும், நாடக இயல்பான நிலைகளை சித்தரிப்பதும் இயல்பாகின இவ் இயல்புகளை பர்கமம் நகரத்தில் கி.மு 195 ல் கட்டபட்ட ஜீஸ் கடவுளின் பலிபீடசிற்பத்தில் காணலாம்.

இறக்கை கொண்ட வெற்றி தேவதைச்சிற்பம், மிலாஸ் (melos) என்ற தீவில் கிடைத்த வீனஸ் தேவதையின் சிற்பம், லேயாக் கோவகன் தொகுதிச் சிற்பம், இறக்கும் காலல் முதலியன சிற்பங்கள் ஹெலனிஸ்டிய கால சிற்பங்களுக்கு சிறப்பான எடுத்துக்காட்டாகும்

லேயாக்கோவன் தொகுதிச் சிற்பத்தில் தந்தையும் மக்களும் பாம்புகளுடன் உயிருக்காக போராடும் காட்சி உணர்ச்சி மிக்கதாக காட்டப்பட்டுள்ளது இதன் உயரம் 7அடி 6 அங்குலம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரேக்கச் சிற்பிகள்

### பொலிக்ட்டஸ் (Polyclitus)

மனிதவடிவங்கள் அமைக்க சரியான விகிதங்களை அமைத்தார். டெல்பையில் கிடைத்த தேரோட்டியின் வெண்கலச்சிலை அழகும் புதிய இயற்கை நவரசத்தன்மையும் மிக்கதாக காட்சியளிக்கிறது. இதன் காலம் கி.மு 480. இதன் தலைமயிரின் சுருள்களும் கைகளும், கால்களும் இயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது. இவரின் சமநிலை வீரன் (ஈட்டி எறிபவன்) என்ற சிற்பமும் மிகத்தரம் வாய்ந்ததாகும் நிர்வாணமாக காணப்படும் இச்சிலையில் உடல் வளப்பை சிறப்பாக எடுத்துக்காட்டுள்ளது.

### Phidias (பீடியாஸ்) - கி.மு 500 - 435

அதன்சின் சிறந்த சிற்பி' எனப்போற்றப்படுகின்றனர். உயிருள்ள மனிதர்களைப்போன்று சிற்பங்களை இயற்கையாக செதுக்கயிருக்கிறார். பீடியாசின் சிற்பங்கள் பெரும்பாலும் மனிதனின் உயரத்தில் 7 மடங்கு பெரிதாக இருக்கும். பீடியாஸ் பார்த்தினன் கோவிலுக்காக அமைத்த அதீனா என்னும் தேவதையின் சிற்பமும் ஒலிம்பியாக் கோவிலுக்காக அமைத்த சேயுஸ் எனப்படும் தெய்வத்தின் சிலையும் பிடியாசின் சிற்பங்களில் குறிப்பிடத்தக்கன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீனா பெண் தெய்வத்தின் சிற்ப வேலைப்பாடுகள் பிடியாசின் மிகச்சிறப்பான கலைத் திறனை எடுத்துக்காட்டுகிறது. மனித உடற்கூற்றியல் பற்றிய சிறப்பான அறிவோடு இச்சிற்பங்கள் படைக்கப் பட்டுள்ளது.அதீனா தேவி சிலை 39 அடி உயரமான தாகும்.

பார்த்தினன் கோவிலில் உள்ள பிடியாசின் விதிதேவதைகள் மூவர்(Three Fates) என்ற சலவைக்கல் சிற்பங்கள் உடற்கட்டும் வனப்பும் பொருந்திய நங்கையர்களாக் திகழ்கின்றனர் இவர்களின் உடலில் போர்க்கப்பட்டுள்ள மெல்லிய போர்வைகள் ஊடாக உடற்கவர்ச்சி காட்டப்பட்டுள்ளது.

## Myran (மைரன்)

வெண்கல வார்ப்புச் சிற்பக்கலை வளர்ச்சிக்கு துணை நின்றவர்களில் (Myran) சிறப்புக்குரியவர் கி.மு 450 அளவில் வெண்கலச் சிலைகளை ஆலய ரத்தில் அமைத்துப் புகழ் பெற்றார் இவரின் பரிதிவட்டம் எறிபவன் (Discor Thrower) சிலையும், ஆடும் சட்டையர் (Dancing satyr) என்பவை புகழ்பெற்றவை. பரிதிவட்டம் வீசவன் என்ற சிலை மையிரனின் மிகச்சிறந்த மதிநுட்ப த்தை வெளிப்படுத்தியுள்ளது. இச்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலையின் உடலமைப்பு நன்கு வெளிக்காட்டப்படுகிறது. சுழன்று வீசும்போது ஏற்படும் உடல் தசையமைப்பின் வெளிப்பாடும் கை , கால் என்பவற்றின் நிலையும் லயபூர்வமான அசைவும் மிகச்சிறப்பானது 5அடி 4அங்குல உயரமுடைய இச்சிலை வெண்கல வார்ப்பு மூலம் ஆக்கப்பட்டது.

## பிராக்ஸிடெல்ஸ் (Praxitetes) (கி.மு 380)

பீடியாசுக்கு பிற்பட்டவராக பிராக்ஸிடெல்ஸின் (praxitetes)இயற்கை நவிற்சித்திறனை மேலும் ஒரு படி உயர்த்திக் காட்டியுள்ளார் இவர் செய்த ஹேர்மிஸ் (Hermes) என்ற தெய்வச்சிலை உயிர்த் துடிப்பானது இது 4 அடி உயர மானது. மனித உடற்கூற்றியல் பற்றிய சிறந்த அறிவோடு இச்சிலை படைக்கப்பட்டுள்ளது. இளமைத்துடிப்பை வெளிப்படுத்தி நிற்கும் இச்சிலையின் இடது கரம் டயோனியஸ் குழந்தையை தாங்கியுள்ளது குழந்தையின் கீழ்ப்பகுதியை மறைத்திருக்கும் துணி கீழே தொங்குகிறது அத்துணியின் மடிப்புக் கூட மிகவும் தத்ருபமாக காட்டப்பட்டுள்ளது. அத்துணிக்கு ஊடே சிலைக்கான முண்டு காணப்படுகின்றது இது இவரது மதி நுட்பத்தின் சிறந்த வெளிப்பாடு ஆகும். இக் ஹேர்மிஸின் வலதுகரம் துண்டிக்கப்பட்டுள்ளது. நிர்வாணமாக காணப்படும் இச் சிலையின் முகம் புன்சிரிப்பை வெளிப்படுத்தியவாறு குழந்தையை நோக்கியுள்ளது. ஒலிம்பியாவில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள ஹர்ரா (Hera) ஆலயத்திற்காக இது செய்யப்பட்டது.

இவரது இன்னொரு சிறந்த படைப்பு அப்போடைற் நிடோஸ் (The aphro dite of knidos) என்ற சிலையும் சிறப்பிற்குரியது. இச் சிலையில் லாவகமாக நிலையில் நிர்வாணமாக காணப்படும் இள நங்கையொருத்தி ஆடையை களைந்து கையில் வைத்திருப்பது போல காணப்படுகின்றது சிலைக்கான முண்டினை ஒரு சாடி வடிவில் அமைத்துள்ளார். இதன் உயரம் 6 அடி 2 அங்குலம் ஆகும்.

## கிரேக்கர்களின் சிறப்பு வாய்ந்த தெய்வச்சிலைகள்

### வீனஸ் சிற்பம்

முழு மனித அளவில் சலவைக்கல்லில் அமைக்கப்பட்டுள்ள இப் பெண் வடிவம் கி.மு 3ம் நூற்றாண்டளவில் உருவாக்கப்பட்டதாகும். இச்சிலை அப்றோடைற் மெலோஸ் (Aphrodite of melos) எனவும் அழைக்கப்படுகிறது. புன்னகை தவழும் முகத்துடன் இடை வரை. ஆடை நெகிழ்ந்து காணப்படும் இச்சிற்பத்தின் இருகைகளும் துண்டிக்கப் பட்டுள்ளன இச்சிற்பம் தற்போது பரீசில் உள்ள லூவர் மியூசியத்தில் காணப்படு கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பலோ (Apoll) சூரியதேவன்.

பண்டைய கிரேக்கர் சூரியனை அப்பலோ என்று தெய்வமாக வழிபட்டனர் இந்த அப்பலோ தெய்வத்தின் சிற்பம். சியூஸ் தேவாலயத்தில் காணப்படுகிறது இடம் ஒலிம்பியா உயரம் 19அடி. சலைவைக்கல்லால் ஆனது.

## அதீனா (Athena)

போர். அறிவு, அறிவியல், கலைகள் ஆகியவற்றுக்குரிய கிரேக்கப் பெண் தெய்வமாக அதினா குறிப்பிடப்படுகிறாள். சேயுஸ் என்னும் (Zeus) முதன்மைக் கடவுள் அல்லது கடவுள்களின் அரசன், இவள் நெற்றியிலிருந்து தோன்றியவர் என்று கிரேக்க புராணம் கூறுகிறது. இவள் போருக்குச் செல்வது போல கவசங்கள் அணிந்து படைக்கருவிகளை கொண்டிருப்பவள். கிரேக்கர்கள் கலைக்கும் கைத்தொழிலுக்கும் கடவுளாக இவளை வணங்கினர். அதினா (Athena) கன்னித்தெய்வமாவாள் இவளது கோயில் ஒன்று அதன்சில் உள்ளது. அக்கோயில் பார்த்தினன் (Parthernon) கோயில் எனக்கூறப்படுகிறது. இவள் மரங்களில் தலைசிறந்த மரமாகிய ஒலிவ மரத்தை (Olive Tree) உண்டாக்கியதால் சிறந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள். இதனால் ஆதென்சு எனும் கிரேக்க நகர அரசின் (City stote) தலைநகரத்திற்கு இவளுடைய பெயர் சூட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரேக்க ஓவியங்கள்

கிரேக்க வீடு, யுத்தக்களம், பொதுக்கட்டிடங்கள் ஆகியன விசாலமான சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டதற்கு சான்றுகள் உள்ளன ஆயினும் இன்று சில சித்திரத்துண்டுகள் மாத்திரமே மீதிகளாக உள்ளன

மனை நிர்மாணிப்பில் சிற்பக்கலை வகைகளும், அலங்கார வேலைகளுக்காகச் சித்திரமும் சேர்க்கப்பட்டுள்ளது. பல சந்தர்பங்களில் தேவாலயங்களில் செதுக்கப்பட்ட ஓரளவு உயர் நிலைக் கதைகள் நிறந்தீட்டவும், அவற்றிக்கு சிறப்பான இயற்கை த்தோற்றத்தைப் பெற்றுக் கொடுக்கவும், தொலைவில் இருந்து பார்ப்பதை இலகுவாக்கவும் சித்திரக்கலையை ஏற்படுத்திக் கொண்டிருப்பார்கள் என கலைஞர்களின் குருவான விலின்ஸ்கி கூறுகின்றார். இதன் படி பார்க்கும் போது கிரேக்க கலைஞர்களுக்கு.

- அளவுப் பிரமாணம் பற்றிய அறிவும்
- தூரக் காட்சி (தூர தரிசனம் ) பற்றிய விளக்கமும்
- நிறங்கள் பற்றிய அறிவும்
- மனிதனையும், மிருகங்களினதும் நடைமுறைகள் பற்றிய அறிவும்
- ஒருங்கமைப்பு

ஆகிய கலை இயல்புகள் தொடர்பாக உயர்ந்த அறிவு இருந்ததாகத் தென்படுகிறது.

கிரேக்கர்கள் தமது ஓவிய ஆக்கங்களில் சமச்சீர்மை வலியுறுத்தப்பட்டது. இயற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கு மீறிய உறுப்புக்களையோ, அலகுகளையோ, இவர்கள் தமது அழகுப் படைப்புகளிலே சேர்த்துக் கொள்ள வில்லை . மறைத்தும், ஒளித்தும் திரித்தும் காட்டும் கலை இயல்புகளை அவர்களது கலைப்படைப்புக்களில் காணல் அரிது கிரேக்க ஓவியங்களிலும், சிற்பங்களிலும், இயற் பண்புவாதம் (Naturealism) இழையோடியுள்ளது.

கிரேக்கர்களது பண்டைய ஓவிய இயல்புகளை வண்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டத் துண்டு கள், சீலைகள், சிதைந்துபோன சுவரோவியங்கள் முதலிய வற்றிலிருந்து விளக்க முடியும். கிரேக்க ஓவியங்களுள் பொலிஞோட்டஸ் (Polygnotus) (கி.மு. 475 - 455) சிறப்பாக குறிப்பிடத்தக்கவர். அதென்ஸ் நகரப் பொது மண்டபச் சுவரோவியங்கள் பலவற்றை அவர் வரைந்தார். அவற்றுள் போர்க்கள நிகழ்சிகளை சித்தரிக்கும் ஓவியங் கள் சிறப்பானது.

கி.மு 5ம் நூற்றாண்டில் செயுஸிஸ் (Zeuxis), பர்ராசியஸ் (Parrahasius) என்ற சிறப்புமிக்க ஓவியர்கள் வாழ்ந்தார்கள். செயுஸிஸ் வரைந்த திராட்சைப்பழங்களை உண்மைப்பழங்கள் என்று எண்ணிப் பறவைகள் கொத்தியதாக செவிவழிக்கதை உண்டு. பர்ராசியஸ் வரைந்த திரைச்சேலையை உண்மைச்சேலை என்று கருதி அதைக் கைகளால் நீக்க முன்ற கதையும் உண்டு

அலெக்சாந்தரின் ஆஸ்தான ஓவியரான அபெல்லஸ் (Apelles) என்பவர் அப்ரோடைற் (Aphrodite) என்னும் தெய்வம் கடலலைகளில் இருந்து எழுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற புராணக்கதையை தன் கற்பனையுடன் ஓவியமாக வரைந்தார். அவர் வரைந்த குதிரை ஓவியத்தைக் கண்ட உண்மைக் குதிரைகள் அதனுடன் பேச முயன்றன என்ற கதையும் உண்டு.

## கிரேக்கர் மலர்ச்சாடி ஓவியங்கள்

கிரேக்கர்களின் கைவண்ணங்களை அவர்களின் மலர்ச்சாடிகளில் காணமுடியும் குறிப்பாக கூறும்போது பண்டைய கிரேக்கர்கள் ஓவியங்களை சுவர்களில் ஓவியமாக வரைவதிலும் பார்க்க பூச்சாடிகளில் வரைவதல் அதிக நாட்டம் காட்டினர் ஆரம்ப காலத்தில் பயன் பாட்டின் பொருட்டு மட்பாண்டங்கள் பல்வேறு வடிவங் களில் வடிவமைக்கப்பட்டன பின்னர் அதற்கு வர்ணம் தீட்டும் முறையும் உண்டாகியது.

கிரேக்க நாகரீகம் வளர்ச்சிக்கு ஈஜிய நாகரீகம் அல்லது கிறீட்டன் நாகரீகம் பின்புலமாக அமைந்தது என முன்னரே குறிப்பிட்டுள்ளேன் இந்த ஈஜிய நாகரீகம் அல்லது கிறீட்டன் நாகரீகத்தின் தொல் நகரங்களில் ஒன்று கனோசன்ஸ் (knosson) இங்கிருந்த மக்களின் வாழ்க்கையுடனும், தொழில் முறைகளுடனும், சடங்களுடன் இணைந்த பல கலைப்பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன அவற்றுள் மலர்ச்சாடி வேலைகள் முதன்மையான இடத்தை பெறுகின்றது இங்கே கண்டு பிடிக்கப்பட்ட அறுவடைப் பூச்சாடியானது (Harvest vase) கலையாக்கத்தில் உன்னத வடிவமாகக் கொள்ளப் படுகின்றது அறுவடை நிகழ்வின் போது ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவயவங்கள் பல தொகுக்கப்பட்டதாக இப்பூச்சாடி ஓவியம் காணப்படுகின்றது

இந்த மட்பாண்டங்களில் காணப்படும் கோல வரைவுளை வரைய நுண்ணிய கருவிகளை பயன் படுத்தியுள்ளார்கள் இந்த மலர்ச்சாடிகள் பொதுவாக கேத்திர கணித வடிவங்களையும் நாளாந்த வாழ்க்கை குறிப்புகளையும் சித்தரிக்கின்றன.

இந்த கிரீட்டன் நாகரிகத்தின் தொடர்ச்சியாக கிரேக்க நாகரீகம் காணப்படுவதால் அவர்களின் சாடிப்பாரம்பரியம் கிரேக்க நாகரிகத்துள் வருகின்றது முதலாவது காலத்தை பிரதிநிதிப்படுத்தும் 6 சாடிகளும் 6 கட்ட வளர்ச்சி நிலைகளை காட்டி நிற்கின்றன

முதலாவது கால கட்ட வளர்ச்சியின் இரண்டு கைபிடிகள் சாடிகளில் காணப்படு கின்றன இது ஒருவகையில் மைசீனியத் தொடர்ச்சி எனலாம்.

இரண்டாவது காலகட்ட வளர்ச்சியாக Dipylon vase( டிப்பிலையோன் சாடி) விளங்குகிறது. இது கி.மு 8 ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதில் மிகச்சிறிய உருவங்கள் குறியீடாகவும் கேத்திர கணித அலங்காரம் அதிகமாகவும் உள்ளன.

மூன்றாவது காலகட்ட வளர்ச்சியாக Geometric Dipylon Krote vase (யோமற்றிக் டிப்பிலையோன் குறேட்டே) விளங்குகிறது. இது கி.மு 8ம் நூற்றாண் டைச் சேர்ந்தது இச் சாடியில் உடல் அமைப்பும் பெரிதாக உள்ளது மனித உருவங்களின் இருப்பு பெரிதாக காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது காலகட்டமாக The Blinding of polyphemos and Gorgons Vase(த பிலைன்டிங் ஒவ் பொலிப்பீமஸ் யேகன்ஸ் சாடி ) விளங்குகிறது. இது கி.மு 670 -630 வரையுள்ள காலப்பகுதிக்குரியது இதில் உருவங்கள் அதிகரித்துக் காணப்படுகிறது. கேத்திர கணித அலங்காரங்கள் குறைக்கப்பட்டுள்ளது. கதை சொல்லும் பாணியிலே உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது கால கட்ட வளர்ச்சியாக The fraincuse vase (பிறைன்கூஸ் சாடி) விளங்குகிறது. இதில் கதை சொல்லும் பாணியில் கிரேக்கர்களுடைய நாடகம் சித்தரிக்கப்பட்டுள்ளது இதன் நிறம் ஆரம்பத்தில் கறுப்பாக இருந்தது.

ஆறாவது கட்ட சாடி ஐந்தாவது கால கட்ட சாடியில் இருந்து சிறிது மாற்றத்தையே கொண்டுள்ளது. கறுப்பு,கபிலம்,சிவப்பு நிறப் பயன்பாடு காணைப்படுகிறது. அத்தோடு முன்னைய சாடி களில் காணப்பட்ட இறுகிய தன்மை தளர்ந்து காணப் படுகிறது.

கிரேக்க பூச்சாடி ஓவியங்கள்.
பெரும்பாலும் வாழ்க்கையில் நாளாந்த நிகழ்வுகளையும். கிரேக்க புராண சம்பவங்களையும், நாடகக்காட்சிகளையும் சித்தரிக்கின்றன.

புராணைக் கதைகளை சித்தரிக்கும் மலர்ச்சாடியொன்றிலே பாம்புகளை கூந்தலாகக் கொண்ட மூன்று சகோதரிகள் ஒவ்வொருதர் பின் ஒருவராக பின்தொடர்ந்து செல்வதாக காட்டப்பட்டுள்ளது. அக்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் புராணக்கதைகளை (Mythological) தங்களது கலைப்பொருட்களில் அறிமுகம் செய்வதை இதன்மூலம் அறியலாம்.

இன்னொரு மலர்ச்சாடியொன்றிலே தலை முதல் பாதம் வரை கவசமணிந்த போர் வீரர் அறுவர் வட்ட வடிவமான கேடயங்களைக் கைகளில் ஏந்திக் கொண்டு படைக்களம் நோக்கி அணிவகுத்துச் செல்கின்றனர் அதைப் பெண் ஒருத்தி நின்று வேடிக்கை பார்க்கின்றாள் இவ்வாறன மலர்சாடி ஓவியங்கள் அக்கால போர்க் காட்சிகளை சித்திரித்துக் காட்டுவனவாக உள்ளது.

அக்கால மக்களின் உட்கொள்ளும் உணவு வகைகளைய சித்தரிக்கு ஓவியத்தை கொண்ட ஒரு பூச்சாடியொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது இப்பூச்சாடியிலே இறைச்சிக்கடை ஒன்றில் மாடு ஒன்றினை வெட்டுவது போலவும் அருகில் உதவியாளனாக ஒருவர் பிடிப்பதையும் தெளிவாக காட்டுகிறது

இன்னொரு மலர்ச்சாடியில் அவர்களின் தொழில் தன்மையை காணக் கூடியதாக உள்ளது இந்த ஓவியத்தில் பாதணியை சீர் செய்யும் தொழிலாளியும், சீர்படுத்த வந்திருக்கும் வாடிக்கையாளரையும் காணலாம்.

இந்த சாடிகளில் விலங்குருவங்கள் தவிர ஏனைய இடைவெளிகளை நிரப்புவதற்கு புள்ளிகள், முறிந்து வளைந்து செல்கின்ற கோடுகள் (zigzay) மற்றும் ஏனைய சில வடிவங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன ஆரம்பகால சில சாடிகள் கறுப்புநிற நடையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையப்பட்டுள்ளன பிற்காலத்தில் சாடியை கருதிறமாக்கி சென்திறத்திலே உருவங்களை வரைந்துள்ளார்கள் பின்னர் மஞ்சள், கபிலம் போன்ற வர்ணங்களையும் பயன்படுத்தி யிருக்கிறார்கள்.

வர்ணம்தீட்டிய பாத்திரங்களை, மெருகிட்டவை, மெருகிடாதவை என இருவகையாக பிரிக்கலாம். மேருகிடாத பாத்திரங்களில் அழகுக்காக கோடுகளையும் சுருள்வடிங்களையும் வரைந்துள்ளனர், மெழுகெண்ணை பூசப்பட்ட சாடிகளில்( மெருகிட்டவை ) செடிகள், கொடிகள் விலங்குகள் போன்ற உருவங்களை தீட்டியுள்ளார்கள்

## வேடமுகம் (Mask)

கிரேக்கர்களின் கைவினை வேலைப்பாடுகளில் வேடமுகங்கள் முக்கியமானதொரு இடத்தைப் பெறுகிறது இந்த வேடமுகங்களை கிரேக்கர்களின் தமது நாடக ஆற்றுகைக்காக தயாரித்தனர். கிரேக்க நாடகப் பாரம்பரியத்தில் ஒரு நடிகர் ஒரு பாத்திரத்தைத்தான் நடிக்க வேண்டுமென்றில்லை. அவர் மாறி மாறி பல பாத்திரங்களை நடிக்கலாம். இதனை சிறப்பான முறையில் செய்ய வேடமுகங்கள் பயன்பட்டன. ஆணாகவோ, பெண்ணாகவோ காட்டுவதற்கு கூட இந்த வேடமுகங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. அதே நேரம் 14000க்கு மேற்பட்ட பார்வையாளர் கூடியிருக்கும் அரங்கிலே நடிகர்களை துல்லியமாக தெரியவும் இந்த வேட முகங்கள் பயன்பட்டன.

**********

உசாத்துணை நூல்கள்

1. புதுமுறைச்சரிதம்
2. வாழ்வியல் களஞ்சியம்
3. கலைக்களஞ்சியம்
4. The Origins of western art
5. கலையும் ஓவியமும்
6. Greece
7. Classical Greece
8. Greece Sclptures
9. The Plates
10. அரங்கு ஓர் அறிமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சித்திர ஆசிரியரான இவர் I.A.T சித்திரப்பயிற்சி நிறுவனத்தின் ஸ்தாபகருமாவார். இந்த நிறுவனம் சித்திரப் பயிற்சியை வழங்குவதோடு, பயிற்சி முடிவில் சான்றிதழ்களையும் வழங்குகிறது. இவர் பல ஓவியக்கண் காட்சிகளை நடாத்தியவர். பரிசுகள் பல பெற்றவர். ஒரு நாடக ஆசிரியராக விளங்கும் இவர் ஓவியக்கலை சம்பந்தமாக கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதுவதோடு சித்திரப் பாட நூல்களையும் எழுதி வருகிறார். இவரது ஓவியங்கள் நவீன பாணியிலும், யதார்த்த பாணியிலும் அமைந்தவை. இவரின் ஓவியங்களில் அநேகமானவை நிலக்காட்சிகளையே சித்தரிக்கின்றன. இவருடைய தந்தையாரும் ஒரு பிரபல்யமான சித்திர ஆசிரியராவார்.

நன்றி – தூரிகை
வடக்கு, கிழக்கு மாகாண
ஓவியக் கண்காட்சி சிறப்பிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org